THIRU K. T. K. THANGAMANI : Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the strike of the 1,000 workers of Mahalakshmi Mills, Madurai demanding payment of minimum bonus, for the years 1965 to 1969, from 20th October 1971.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, மதுரை மகாலட்சுமி ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் உடன்பாட்டை ஒப்புக்கொண்டு வேலைக்கு திரும்பினர் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். முற்பகல் 10-30

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஒரு வார காலம் வேலை நிறுத்தம் செய்ததில் தொழிலாளருக்கு கிடைக்கவேண்டிய போனஸ் பின்னால் கிடைக்கும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேலைக்கு சென்று இருக்கிறார்கள். அந்த நேரத்தில் தொழிலாள அமைச்சர் இங்கு இல்லாமல் இருந்ததால், வேறு அமைச்சர் தலையீட்டின் காரணமாக பிரச்சனை சீக்கிரம் முடிந்தது. இப்பேர்ப்பட்ட தகராறுகள் வருகிறபோது, மற்ற அமைச்சர்கள் தலையிட்டு உதவி செய்ய ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அதுபோலவே நாங்கள் அந்த முறையை பின்பற்றி வருகிறோம். தொடர்ந்து அந்த முறை பின்பற்றி வரும்.

(5) அறிவிப்பு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக்காக (அண்ணாமலை யூனிவர்சிடி செனெட்) மூவருடைய பெயர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது மூன்று என்பதால், திரு. எம். செல்வராஜ், திரு. பொன் சொக்கலிங்கம், திரு. க. சுப்பு ஆகிய மூன்று வேட்பாளர்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

(6) 1971-72-ம் ஆண்டிற்கான மின் வாரியத்தின் நிதி நிலை அறிக்கைமீதான விவாதம்—தொடர்ச்சி.

திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மின் வாரிய அறிக்கையை பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சித் தரக்கூடிய அறிக்கையாக இருக்கிறது. மிகவும் சிறப்பான முறையில் அந்த நிர்வாகம் செயல்படவேண்டும். அந்த நிர்வாகத்திடம் ஒத்துழைப்புக் கொடுத்து நம் நாட்டிலே உள்ள எல்லா கிராமங்களுக்கும் மின்சார சிறப்பு ஏற்பாடுகள் செய்து முடிக்கவேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். திருநெல்வேலி, நீலகிரி மாவட்டங்களில் இருக்கும் எல்லா கிராமப் பகுதிகளுக்கும் மின்சாரம் கொடுத்தாகிவிட்டது. மதுரை மாவட்டம், ஆற்காடு மாவட்டம் இவற்றிற்கு மின்சாரம் கொடுத்தாகி விட்டது. இன்னும் பல கிராமங்களில் மின்சாரம் கொடுக்க முழு முயற்சி அவர்கள் எடுத்துக்